**செய்தி வெளியீடு எண்:520** **நாள்:09.11.2016**

**செய்தி வெளியீடு**

**முதலமைச்சர் கணினித் தமிழ் விருது**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அறிவியல் தமிழை வளர்த்தெடுக்கும் வகையில் **"அறிவியலிலும் தமிழ் அனைத்திலும் தமிழ்"** எனும் இலட்சிய வாசகத்தை மாநாட்டின் அறிவிப்பாக அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டன. அதன் பகுதியாகக் கடந்த 2013ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்.சித்தலைவி அம்மா அவர்கள் வளர்ந்துவரும் கணினியுகத்திற்கேற்ப தமிழ்மொழி வளர்ச்சியைக் கணினியில் அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தும் வகையில் சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்குபவர்களுக்கு **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது வழங்கப்படும்** என்றும், விருது பெறுபவர்களுக்கு விருதுத் தொகையாக ரூ. 1,00,000, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

அவ்வறிவிப்பின்படி ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் 2016ஆம் ஆண்டு **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது**க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. போட்டிக்குரிய மென்பொருள்கள் 2013, 2014, 2015ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித்துறையின் வலைதளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு
வந்து சேர வேண்டிய இறுதி நாள் **31.12.2016**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை, எழும்பூர்
சென்னை – 600 008

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்:** 044 28190412, 044 28190413
**மின்னஞ்சல் :** tamilvalarchithurai@gmail.com
**வலைத்தளம் :** www.tamilvalarchithurai.org

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**